ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று தீர்வு வழங்கினார். அருகில் ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் செல்வராகவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன் மாவட்டப் பொருளாளர் கு.சத்தியமூர்த்தி உட்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

வேலூர் மாவட்டத்திற்கு வருகை தரும்

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வருக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிக்கை!

வேலூர், டிச. 5 -

வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக் கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் அறிக்கை யில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேலூர் மாவட்டத்தில் அரசு சார்பில் ஆய்வு கூட்டம், வேலூர் மாவட்ட அனைத்து தி.மு.க. சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நாளை (06.12.2024 - வெள்ளிக்கிழமை) பிற்பகல் 03.00 மணி அளவில் வேலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர்,

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வேலூர் மாவட்ட எல்லையான பிள்ளை யார் குப்பம் அருகில் எழுச்சிமிகு உற்சாக வரவேற்பை வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் வேலூர் மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகி கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் வட்ட, வார்டு, ஊராட்சி ஊர்க் கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக இந்நாள், முன்னாள் முன்னோடிகள் ஆகியோர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பான தொரு வரவேற்பை வழங்கிட அனைவரும் வருக வருக என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டப் பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் தனது அறிக்கையின் வாயிலாக வேண்டுகோள் விடுத்து ள்ளார்.

ஆவடி தொகுதியில் ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் சாலை வசதி, பள்ளிக் கட்டிடம்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்!

திருவள்ளூர், டிச. 5 -

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி உட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் பள்ளி கல்வித்துறை நிதி பொது நிதியிலிருந்து திட்டப் பணிகளை துவக்க விழா நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு 15 லட்ச ரூபாய் மதிப்பிற்கு ஆவடி காமராஜர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் பவர் பிளாக் தரை தளம், 13. 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதியில் சிந்தாமணி மேய விலை கடைகட்டிடம் கட்ட கட்டுதல் பணி, 32 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சத்தியமூர்த்தி நகர் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணி 64 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் எட்டியம்மன் நகர் மேல்நிலைப் பள்ளியில் 4 கூடுதல் வகுப்பறை கட்டிடம் பணி, 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருமுல்லைவாயில் காலனி ஆதிதிராவிட நிலப் பள்ளியில் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணி 32 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் திருமுல்லைவாயில் பகுதியில் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணி 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் முல்லை நகர் சோழன் நகர் ஆகிய இடங்களில் கூட்டுறவு நியாயவிலை கடை கட்டிடம் கட்டுதல் பணி, 13.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சோழம்பேடு ரேஷன் கடை கட்டுதல் பணி 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சோழம்பேடு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வகம் கட்டிடம் அமைத்தல் பணி, 32 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சோழம்பேடு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டிடம் கட்ட பணி, 13.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செந்தில் நகர் ரேஷன் கடை கட்டிடம் பணி 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சத்யா நகர் சாலையோர உடற்பயிற்சி நிலையம் விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல் பணி, 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகம்மை நகர் , கவரப்பாளையம் ஆகிய இடங்களில் ரேஷன் கடை கட்டிடம் கட்டுதல் பணி, நேரு நகர் தொடக்கப்பள்ளியில் 32 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறை கட்டிடம் பணிகளை அடிக்கல் நாட்டில் பணிகளை தொடங்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து கட்டிடப் பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்தார். மேலும் அப்பகுதியில் இருந்த பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்தார். ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபி சேகர், ஜி.ராஜேந்திரன், ஜோதிலட்சுமி, வி.அம்மு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் எஸ். ஜெயபாலன் மாநகரக் கழக பொறுப்பாளர் சண் பிரகாஷ் பகுதி கழக செயலாளர் பேபி சேகர், ஜி. நாராயண பிரசாத், பொன். விஜயன், வட்டக் கழகச் செயலாளர்கள் கவுன்சிலர்கள் மொசைக் செந்தில், சரளா செந்தில், மனோகரன், சாந்தி பாண்டியன், ராஜி, ஜெயப்பிரியா சரவணன், சக்திவேல், பிரபு வேல், மாலா சன் பிரகாஷ், கோபால் , வெங்கடேசன், செல்வம், சுதாகர், பெருமாள், ரமேஷ்பாபு, கு. சேகர், ஜி. சுகன்யா சதீஷ், உள்பட அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

திருச்செங்கோட்டில் அறுசுவை உணவு!

நகர்மன்றத் தலைவர் சுரேஷ் பாபு வழங்கினார்!

நாமக்கல், டிச. 5 -

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் தமிழ் நாடு துணை முதல்வரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும், தி.மு.க. கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருச்செங்கோடு நகராட்சியில் பணிபுரியும் 300 க்கும் மேற்பட்ட அனைத்து பணியாளர்களுக்கும் நகர மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு பிரியாணி உணவு வழங்கி, அவர்களுடன் அமர்ந்து மதிய உணவு அருந்தினார்.

தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் பேருந்து நிலைய ஆட்டோ ஸ்டாண்ட் பகுதிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகர் மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு ஆகியோர் தலைமையில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள் மாதேஸ்வரன், செல்வி, ராஜவேல் புவனேஸ்வரி, உலகநாதன், திவ்யா வெங்கடேஸ்வரன், தாமரைச் செல்வி மணிகண்டன், ரமேஷ், சினேகா ஹரிகரன், செல்லம்மாள் தேவராஜன், சுரேஷ்குமார் மற்றும் நகர கழக நிர்வாகிகள் கணபதி, ராஜவேல், பெருமாள், சுரேஷ்குமார், தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்டத்தில் நாளைஆய்வு செய்ய வருகைதரும் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் இளைஞர் அணி, மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம் நடந்தது.இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், துணை அமைப்பாளர்கள் என்.பிரகாஷ் அர்ச்சனா நவீன்சங்கர், வி.எம்.டி.பாலாஜி டீட்டாசரவணன், ராஜ் கமல், எம். சத்திய மூர்த்தி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.எம்.தேவராஜ் துணை அமைப்பாளர்கள் விக்ரம், சுந்தர், ஹரி நாத் ஏ.அரவிந்த் ,சுகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 03.12.2024 அன்று சர்வதேச மற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற 55 மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும். நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா. ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பூ. சரவணகுமார். மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி. ஜெயந்தி திருமூர்த்தி, நகரமன்ற தலைவர்கள் திருமதி. சுஜாதா வினோத், திருமதி. ஹரிணி தில்லை, திருமதி. தேவி பென்ஸ்பாண்டியன். ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. புவனேஸ்வரி சத்தியநாதன். நகரமன்ற துணைத் தலைவர்கள் ரமேஷ் கண்ணா திருமதி. பவளக்கொடி சரவணன், முடநீக்கு தொழில்நுட்பாளர் ஆனந்தன், மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் பி. என்.எஸ்.சரவணன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

சிவகங்கை மாவட்டத்தில் கழகக் கொடியேற்றி - நல உதவிகள்!

மு.தென்னவன் – ஆ.தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, டிச. 5 -

சிவகங்கை மாவட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது . மாவட்டம் முழுவதும் கழக கொடி ஏற்றியும் ,நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இனிப்புகள் வழங்கியும் ,திராவிட மாடல் அரசின் மூன்றரை ஆண்டுகால ஆட்சியின் சாதனை களை விளக்கி துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டது .

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகரில் பஸ் நிலையம், பழமலைநகரில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டுகள் வழங்கியும் உழவர் சந்தை, இந்திரா நகர் உட்பட பல்வேறு இடங்களில் கழக கொடி ஏற்றியும் , பார்வையற்றோர் இல்லத்தில் மதிய உணவும் வழங்கப்பட்டது.

நகர்கழக செயலாளரும் நகர் மன்ற தலைவருமான சி.எம்.துரைஆனந்த் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகர்மன்ற துணைத் தலைவர் எம் .கார் கண்ணன்,அ. அயூப் கான், கண்மணி ராதா, ஜெயக்குமார்,வீனஸ் ராம நாதன் ஜெயகாந்தன்,வழக்கறிஞர் ராஜா அமுதன், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், மகளிர் அணி ராஜேஸ்வரி தேவஸ்தான முருகேசன், மதார், சேகர், விஜயகுமார் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை நகர் மன்ற துணை தலைவர் எம்.கார் கண்ணன் ஏற்பாட்டின் பேரில் நீதிமன்றசாலை திருப்பத்தூர் சாலையில் உள்ள பொது மக்களுக்கு போர்வை துண்டுகள் வழங்கப்பட்டது .

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞரணி பிடாவூர் செல்வராஜ் ,கண்மணி ,திருநாவுக்கரசு, சௌந்தர், கார்த்தி ,தியாகராஜன், ராஜ்குமார், ஆபீஸ் கார்த்தி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் அறிவாலயத்தில் கழக கொடி ஏற்றியும் தாய் இல்லத்தில் மதிய உணவு பஸ் பயணிகளுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது. ஒன்றிய செயலாளர். எம். ஜெயராமன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் மார்க்ரெட் கமலா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, இளைஞரணி தங்கம் , துணை அமைப்பாளர் அழகு சுந்தரம், மாணவரணிராம்குமார், மகளிர் அணி மஞ்சுளா ,ஒன்றிய கவுன்சிலர்கள் வேல்முருகன், ரமேஷ் ,முத்துக்குமார் பஞ்சவர்ணம் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடியில் மாநகர கழகத்தின் சார்பில் நகரில் பல்வேறு இடங்களில் கழக கொடி ஏற்றியும் அன்பு இல்லத்தில் மதிய உணவு ம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் நலத்திட்ட உதவிகளை வழங்கி கழக கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கினார். துணை மேயர் மாநகர செயலாளர் என். குணசேகரன் தலைமையில் செயற்குழு உறுப்பினரும் மேயருமான எஸ் .முத்துதுரை முன்னிலை யில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நிர்வாகிகள் சொ. கண்ணன், கவுன்சிலர்கள் கார்த்திகேயன் ,சித்திக் ,பூமிநாதன் ,கலா காசிநாதன், நாகராஜன், மாவட்ட பிரதிநிதி சேவியர், லட்சுமி கணேஷ், ஆதி ராஜ் பாண்டி ,விஜயகுமார், முகமது கனி ,ஓட்டுனர் ரமேஷ் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காளையார் கோவில் தெற்கு ஒன்றியத்தில் மரவமங்கலம் சாத்தரசன்கோட்டையில் கழக கொடியேற்றையும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. ஒன்றிய செயலாளர் யோக .கிருஷ்ணகுமார் தலைமையில் வரதராஜன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .

காளையார் கோவில் கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் பேருந்து நிலையம் முன்பாக கழககொடிஏற்றியும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மதிய உணவினை ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி வழங்கினார். கொல்லங்குடி அறியாக்குறிச்சி வெட்டுடையார் காளி அம்மன் கோவில்,சேத்தூர் கலியுக நாயகி அம்மன் கோயில் ஆகியவற்றின் சிறப்பு வழிபாடு மதிய உணவும் வழங்கப்பட்டது. பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்த கங்கள் வழங்கப்பட்டது .

ஒன்றிய துணைச் செயலாளர் கோதண்டபாணி ஏற்பாட்டின் பேரில் அறங்காவலர் குழு தலைவர் நிர்வாகிகள் கண்ணப்பன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நிர்வாகிகள் கண்ணன் தென்னரசு, அவை தலைவர் சுப. தமிழரசன் அறங்காவலர் குழு உறுப்பினர் சந்திரன் , முத்து, வனிதா கண்ணதாசன் ,ஊராட்சி மன்ற தலைவர் மெய்ஞ்ஞான மூர்த்தி,இந்திய கம்யூனிஸ்ட் சரவணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .

அன்பு இல்லத்தில் ஆர். வி.எஸ்.அரங்க. நாதன் ஏற்பாட்டின் பேரில் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கழக கொடி ஏற்றியும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஜான் சந்தியாகு, தகவல் தொழில் நுட்ப அணி தினேஷ், அரசு, தாமோதரன், மாணவரணி ரமேஷ் முத்தரசு, திருப்பதி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திருப்பத்தூர் பேருந்து நிலையம் முன்பாக ஒன்றிய இளைஞரணி சார்பில் கொடி ஏற்றியும் பொதுமக்களுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டது.

திருக்கோட்டியூரில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், கழக கொடி ஏற்றியும், சவுமியநாராயண பெருமாள் கோவிலில் மதிய உணவும் சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ்.ஏ.வல்லபாய் ஏற்பாட்டின் பேரில் வழங்கப்பட்டது. ஒன்றிய குழு தலைவர் ஒன்றிய செயலாளர்எஸ். சண்முக வடிவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ். எஸ். அருணாச்சலம் மதிய உணவு வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் ஊராட்சிக் கழகச் செயலாளர் கார்த்தி, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் மாணிக்கம் ,வசந்த், ரமேஷ் பட்டர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

இளையான்குடி வடக்கு ஒன்றியம், இளையான்குடி பேரூர் கழகத்தின் சார்பில் கண்மாய் கரையில் கொடி ஏற்றியும் தாய மங்கலத்தில் கழக அரசின் மூன்றரை ஆண்டுகால சாதனைகளை விளக்கி துண்டுப்பிர சுரங்கள் பொது மக்களுக்கு இனிப்புகளும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. முன்னாள் எம்.எல்.ஏ . வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சுப. மதியரசன் தலைமையில் பேரூர் கழகச் செயலாளர் பி.ஏ. நஜ்மூதீன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நிர்வாகிகள் கூட்டுறவு சங்க தலைவர் சுபா.தமிழரசன், சக்தியேந்திரன், விவசாய்அணி காளிமுத்து, வே. கருணாகரன் ,தகவல் தொழில்நுட்ப அணி அன்பரசன் , கண்ணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இளையான்குடி கிழக்கு ஒன்றியம் சூராணத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்வே.தமிழ்மாறன் ஏற்பாட்டில் கழக கொடிஏற்றி பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம் .எல். ஏ. வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பொருளாளர் ஆரோக்கியசாமி, நிர்வாகிகள் தாஸ், கண்ணன், முத்துக்குமார், முருகன் ஒன்றிய கவுன்சிலர் செழியன், தகவல் தொழில் நுட்ப அணி வினோத், இளைஞரணி சிவக்குமார், ஜஸ்டின் ,இளங்கோ, உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மானாமதுரை நகர்கழகம்சார்பில் நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி தலைமையில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும், நகரில் கண்ணார் தெரு உட்பட பல்வேறு இடங்களில் பொது மக்கள் ஆயிரம் பேருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. சி.எஸ்.ஐ. பள்ளியில் இரவு உணவுமற்றும் மரக்கன்றுகளும் நடப்பட்டது கழக அரசின் மூன்றரை ஆண்டுகால சாதனைகளை விளக்கி தெருமுனை கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு நகர் மன்ற தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். மாரியப்பன் கென்னடி முன்னிலை வகித்தார் .

இந்த நிகழ்ச்சியில் அவை தலைவர் ரவிச்சந்திரன் ,பிரதிநிதி கா மூர்த்தி, மாணவர் அணி கார்த்தி, பொதுக்குழு உறுப்பினர் ஏ ஆர் . ஜெயமூர்த்தி, துணைச் செயலாளர்கள் மன்னன், சண்முக ப்ரியா உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திருப்புவனம் ஒன்றியம் பேரூர் கழகங்களின் சார்பில் பஸ்நிலையம் சந்தைதிடல் முன்பாக பொது மக்கள் 1000பேர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் போர்வைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் மாவட்ட கழக துணைச் செயலாளர் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் தலைமைஏற்று வழங்கினார்.

இந்த நிகழ்ச்சி ஒன்றிய கழகச் செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கைமாறன் எம்.ஏ.கடம்பசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் இளைஞர் அணி தேவதாஸ், கண்ணன் ,பேரூராட்சி மன்ற துணை தலைவர் ரகுமத்துல்லா கான், ஈஸ்வரன் ,அக்னிராஜ் , விவசாய அணி துணை அமைப்பாளர் சேகர், அவைத்தலைவர் இளங்கோவன், துணை செயலாளர்கள் பாண்டிய கிருஷ்ணன், ராமு,தொண்டரணி ராஜா ,கவுன்சிலர் சேக்முகமது, மீனவரணி அண்ணாமலை, உட்பட நிர்வாகிகள்வட்ட செயலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் அடுத்த பெருவளையம் ஊராட்சி மன்ற தலைவர் சி.எஸ். கே.குமரேசன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், எழுது பொருள்கள் , மற்றும் 2 ஆயிரம்பேருக்கு பிரியாணி, நலத்திட்ட உதவிகள் வழங்கினார். அருகில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.